

இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—1

கண்ணில் நின்ற மணியே போற்றி
கருத்தில் நின்ற கலையே போற்றி
எண்ணில் நின்ற எழுத்தே போற்றி
எழுத்தில் நின்ற ஒளியே போற்றி
மண்ணில் நின்ற மறையே போற்றி
மறையில் நின்ற மதியே போற்றி
விண்ணில் நின்ற விழவே போற்றி
விழிவில் நின்ற விளக்கே போற்றி.

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—2

உடலில் நின்ற உணர்வே போற்றி
உணர்வை ஊட்டும் மனமே போற்றி
கடலில் நின்ற அலையே போற்றி
கடலை மிஞ்சும் கருணையே போற்றி
நடனிடும் பூதக் கழலே போற்றி
நமனினை ஓட்டும் பதியே போற்றி
உடனிருந் தாளுங் குருவே போற்றி
உள்ளுள் நின்ற மெய்யே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–3

மெய்யால் விளையும் பயனே போற்றி
மேதினியைக் காக்கும் பரனே போற்றி
பொய்யை ஓட்டும் புனிதமே போற்றி
புனிதத்துள் நிறைந்த பூரணம் போற்றி
நெய்யாய் பாலுள் நின்றோன் போற்றி
நிர்மல மாக்கும் நிமலோன் போற்றி
பெய்யும் மாமழை அருளே போற்றி
பேதமிலா தெங்கும் நிறைந்தாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–4

நானாய் காணும் நலமே போற்றி
நலமும் எனதோ உனதே போற்றி
தேனாய் இனிக்கும் சுவையே போற்றி
தேவைக் குதவும் தெய்வமே போற்றி
தானாய் விளைந்த தத்துவம் போற்றி
தவத்துள் நின்ற சத்தியம் போற்றி
கோனாய் கிடைத்தக் கொடையே போற்றி
கோபுரமாய் நின்ற அழகே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—5

அன்பாய் விரிந்த ஆருயிர் போற்றி
அகத்துள் மறைந்த அறிவே போற்றி
என்பால் கருணைச் செய்பவ போற்றி
எழுநிலைத் தாண்டி எழுபவ போற்றி
துன்பாய் துணையாய் தொடர்பவ போற்றி
துணிவாய் நெஞ்சில் உறைந்தவ போற்றி
இன்பாய் உயிரை மயக்குவ போற்றி
எளிதாய் எனக்கே அமைந்தவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–6

பேச்சுள் மறைந்த உயிர்ப்பே போற்றி
பேச வமைந்த மொழியே போற்றி
பீச்சும் கண்ணொளி பீட்ஜமே போற்றி
பிச்செனத் தெறித்தப் பிழையே போற்றி
மூச்சுள் ஒடுங்கிய மூலமே போற்றி
முக்கண் முதல்வன் அடியே போற்றி
ஏச்சும் பேச்சுங் கடந்தோன் போற்றி
ஏதிலார் குற்றங் களைவோன் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–7

சுத்தப் பொருளாய் ஸோபிப்பாய் போற்றி
சுதந்திரந் தந்தெனை சுகிப்பவ போற்றி
சத்தத் துள்நின்ற சதுர்வெளி போற்றி
சமயோ சிதமாய் ஒளிர்பவ போற்றி
பித்தந் தீர்க்கும் பிரமமே போற்றி
பிழைபடா நின்ற பொறிகளே போற்றி
அத்தன் எம்பிரான் அருளொளி போற்றி
ஆருயிர்த் தொழநின்ற ஆண்டவா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–8

சாதிப் பகுப்புள் அடங்காய் போற்றி
சாத்திர தோஷம் ஒட்டாய் போற்றி
ஆதிப் பொருளாய் நின்றாய் போற்றி
ஆருங் கணிக்க முடியாய் போற்றி
சோதித் தருளுங் குணமே போற்றி
சோதியாய் விரவிக் கிடப்போய் போற்றி
பேதித் தறியா பெருமைப் போற்றி
பேரருளாய் எங்கும் காண்பாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–9

நித்திய மாய்நின்ற நடுவே போற்றி
நிம்மதி தரவல்ல நிழலே போற்றி
பத்திய செம்பொருள் மருந்தே போற்றி
பராபர மாயுள பாங்கே போற்றி
சத்திய மாயுள சதாசிவம் போற்றி
சகலமு மறிந்த சாட்சியே போற்றி
மத்தியி லாடும் மறையே போற்றி
மனமாய்த் தோன்றும் மனோன்மணி போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்

ஞானவெளி மெய்ப்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–10

உத்தமர் நெஞ்சின் உறவே போற்றி

உள்ளும் புறமும் அற்றாய் போற்றி

வித்தகர் தேடும் விதையே போற்றி

விலையிலா கலையின் வீரியம் போற்றி

சித்தர்கள் சரண்புகு சந்நிதி போற்றி

சிற்றம் பலத்துறை சீவனே போற்றி

முத்தர்கள் முடிபாய் முளைத்தவ போற்றி

முற்றும் முதலுமாய்த் தொடர்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–11

கற்றார் களிப்பில் கனன்றவ போற்றி
கல்லார்க் கறிவாய் ஊறினாய் போற்றி
பெற்றா ரில்லா பிள்ளையே போற்றி
பெறும்பே றனைத்துமாய் நின்றாய் போற்றி
உற்றா ருறவுக ளற்றாய் போற்றி
உலகிற் குறவாய் ஆனாய் போற்றி
நற்றாள் உன்பதம் மறவேன் போற்றி
நானினி நானிலை நீயே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–12

எண்ணத்தில் மலர்ந்த எழிலே போற்றி
எண்திசை யாளும் ஏந்தலே போற்றி
வண்ணத்தில் செந்நிறம் உன்னதே போற்றி
வையம் காக்கும் வாழ்வே போற்றி
சுண்ணத்தில் பொன்னிற சோதிநீ போற்றி
சொப்பனத் துள்ளும் சுகம்நீ போற்றி
கண்ணப்பி அருள்பெற வைத்தாய் போற்றி
கற்பனைக் கடந்த கற்பகம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–13

நல்லது என்றுமே நீயே போற்றி
நமசி வாயமும் நீயே போற்றி
அல்லதை நீக்கும் அற்புதம் போற்றி
அருந்தவத் தார்க்கும் அரிதே போற்றி
பொல்லதை மாற்றும் புனிதமே போற்றி
போற்றுவார் தமக்கு போதம்நீ போற்றி
வல்லவன் உனக்கிணை யாருளார் போற்றி
வாழ்த்த வழியிட்ட வரமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–14

செப்பும் மொழியனைத்தில் செந்தமிழ்நீ போற்றி
சேரும் இடமறிந்து சேர்ப்பித்தாய் போற்றி
தப்புந் தவறுமிலா தவமேநீ போற்றி
தண்டிக்கா தாயுள்ளங் கொண்டவ போற்றி
எப்பவும் எந்நினைவாய் இருப்பவ போற்றி
எண்ணும் எழுத்துமாய் எழுந்தவ போற்றி
அப்பனுந் தாயுமாய் ஆனவ போற்றி
அண்டமும் பிண்டமும் ஆள்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–15

பிறப்பிலா பிஞ்சகன் பொன்னடி போற்றி
பிறப்பை யறுக்க வல்லோனே போற்றி
மறப்பிலா நெஞ்சகம் வாழ்வோய் போற்றி
மருந்தென வினைக்கு முளைத்தாய் போற்றி
துறந்தவர் தொடர்பில் துளிர்ப்பவ போற்றி
துணிவுள நெஞ்சிற்கு துணையே போற்றி
அறவழி செல்பவர் அருகுளாய் போற்றி
அஞ்சில் விளையும் ஆனந்தம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு – 16

மட்டிலா மகிழ்வினை தருபவ போற்றி
மனமெய் மொழியினைக் கடந்தவ போற்றி
அட்டமா சித்தினை அருள்பவ போற்றி
அப்பாலுக் கப்பாலாய் இருப்பவ போற்றி
துட்டர் நெஞ்சிற்கு தொடர்பிலாய் போற்றி
துளியும் பயமிலா தொன்மையா போற்றி
வட்டமோ சதுரமோ வழவிலாய் போற்றி
வாழ்த்துவார் வாய்மொழி ஆகினாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–17

ஒத்திருந் தென்னை உய்விப்பான் போற்றி
ஓர்ந்தவர்க் குள்ளே ஓங்குவான் போற்றி
எத்திசைக்கும் ஏற்ற ஒளிர்பொருள் போற்றி
ஏழ்நிலைக் குள்ளும் எரிபொருள் போற்றி
நித்திரைத் தந்து நீட்டிப்பான் போற்றி
நித்திரை விட்டு எழுப்பிப்பான் போற்றி
முத்திரைக் காட்டி முயற்சிப்பான் போற்றி
முடிவுக்குள் நின்று முழுதானான் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு – 18

உண்டென்றுச் சொல்வார்க்குள் உண்டானாய் போற்றி
உருவிற்கு மருவிற்கு முரமானாய் போற்றி
பண்டென்றுப் பகர்வார்க்குப் புதிரானாய் போற்றி
பகையற்ற நெஞ்சிற்குள் பதிவானாய் போற்றி
கண்டொன்றுச் சொல்வார்க்குக் கழிதானாய் போற்றி
கண்மூடிக் காண்போர்க்கே கதியானாய் போற்றி
தண்ஞூன்று முன்தேடும் பொருளானாய் போற்றி
தவஞானத் தால்கிடைக்கும் தமிழானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–19

தாய்சொல்லி தானறியத் தெரிபவனே போற்றி
தந்தைக்கும் முந்தைநின் றாள்பவனே போற்றி
வாய்சொல்லி ஊர்வளர்த்தப் பிள்ளையே போற்றி
வற்றாத ஜீவனாக இருப்பவனே போற்றி
காய்கனிபோல் காட்சியிலே புரண்டிருப்பாய் போற்றி
கதிரொளியாய் இருளுக்குள் மறைந்திருப்பாய் போற்றி
தூய்மனத்தார் துவளாமல் தேடுபவ போற்றி
துரியத்தோ டதீதமாய் தோன்றுபவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–20

என்பொருள்நீ என்பார்க்கும் ஏற்றபொருள் போற்றி
எனதில்லை என்பார்க்கும் எதிர்படுவாய் போற்றி
தன்பொருளாய் தொழுவோர்க்கு தவபொருளே போற்றி
தத்துவந் தெரியாரின் தத்துவம்நீ போற்றி
நின்பொருளாய் எனைக்கொண்டு மகிழ்விப்பாய் போற்றி
நின்னடிக்கண் உயிரனைத்தும் ஒடுக்குவிப்பாய் போற்றி
முன்னைக்கும் முன்னைநீ முடிவில்லாய் போற்றி
முயன்றடங்கிப் போனார்க்கு மறையானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—21

கருவுக்குள் அடங்காதக் கருபொருளே போற்றி

கனவுக்குள் நிஜமாகும் காரியமே போற்றி

பருவுக்குள் அணுத்துகளாய் பதுங்கியவ போற்றி

பகலிரவாய் பயணிக்கும் பரபொருளே போற்றி

திருவாகித் திண்ணியர்க்குத் தெவிட்டாதான் போற்றி

திருவிடையில் தெரியார்க்குத் தெளிவிப்பான் போற்றி

குருவாகி குவலயத்தார் குறையறுப்பான் போற்றி

கும்பிட்ட நெஞ்சினுக்குள் குடியிருப்பான் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—22

ஒன்றென்றும் ரெண்டென்றும் ஒளிர்கின்றாய் போற்றி
ஒவ்வொருவர் நிலைக்கொத்து நினைவானாய் போற்றி
நன்றென்றுந் தீதென்றும் நீயானாய் போற்றி
நலங்கூட்டும் நல்லடியார் நடுவானாய் போற்றி
அன்பென்றே அகத்திருந்து ஆட்டுவிப்பாய் போற்றி
அறிவறிவார்க் குறவாகி ஆளுகின்றாய் போற்றி
இன்பில்லா துன்பில்லா இயல்பானாய் போற்றி
இறுமாந் திருப்போர்க்கு மறைவானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–23

பற்றில்லா பொருளுக்குள் பற்றானாய் போற்றி

பரந்தேடி யலைவார்க்கு பதமானாய் போற்றி

குற்றத்தில் உறைவார்க்கு குணமானாய் போற்றி

குறைகழன்ற நெஞ்சினர்க்கு குருவானாய் போற்றி

அற்றத்தில் ஆழ்ந்திருக்கும் அதிசயமே போற்றி

அற்புதங்கள் தினங்கூட்டும் அண்டவெளி போற்றி

சிற்றம் பலத்திருக்கும் மெய்ப்பொருளே போற்றி

சிந்திப்பார் சிந்தைக்குள் சிவமானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—24

ஆண்டெண்ணி நிற்பார்க்கு அகப்படாய் போற்றி

ஆணென்றும் பெண்ணென்றும் அறியொணாய் போற்றி

தூண்டாமல் துலங்கிடும் மணியானாய் போற்றி

தூமதி சூடிய வான்மதி போற்றி

மாண்டாரை மீளாராய் ஆக்கினோய் போற்றி

மாசில்லா மனதோர்க்கே மார்க்கம்நீ போற்றி

வேண்டார்க்கும் வேண்டியதை ஈகின்றோய் போற்றி

வேண்டுங்கால் பிறவாமை அருள்வோய்நீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–25

வானம் வழிகாட்ட வருவோனே போற்றி

வார்த்தைக்கு மிஞ்சிய மௌனமே போற்றி

தானம் தவந்தந்த செல்வமே போற்றி

தத்துவத்தின் தத்துவமாய் தானிருப்போன் போற்றி

மானம் மரியாதைக் கடந்தோனே போற்றி

மன்னிப்பார் மனத்தோரம் மகிழ்வோனே போற்றி

ஆனப் பொருளனைத்து மானாய்நீ போற்றி

ஆண்டாண்டுக் கழிந்தாலும் அழியோனே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–26

பாடிட வென்னைப் பணித்தாய் போற்றி
பாடும் பொருளாய் ஆனாய் போற்றி
கூடிட நெஞ்சில் குழைந்தாய் போற்றி
கும்பிட விருகரங் கொடுத்தாய் போற்றி
ஆடிட பாதம் ஆனாய் போற்றி
ஆணும் பெண்ணாய் நின்றாய் போற்றி
தேடிட நினைவில் எழுந்தாய் போற்றி
தேவா மிர்தமாய் இனிப்பாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–27

அய்யா வெனக்கே ஆனாய் போற்றி
அறியா திருந்தனன் பொறுப்பாய் போற்றி
கொய்யா மலராய்க் குவிந்தாய் போற்றி
கொண்டுபி பிறந்ததன் பலனே போற்றி
செய்யா விடுத்த வினையே போற்றி
செய்திட வைத்தத் துணிவே போற்றி
பெய்யா திருக்கும் புனலே போற்றி
பெய்துயிர்க் காக்கும் மழையே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–28

பிறவித் துன்பந் துடைப்பாய் போற்றி
பிறந்ததன் பலனைத் தருவோய் போற்றி
துறவியின் துணையாய் தொடர்வோன் போற்றி
துறந்தார்க் கின்பம் நீயே போற்றி
அறவழிக் காட்டும் அய்யனே போற்றி
அங்கிங் கெல்லாம் நிறைந்தாய் போற்றி
மறவழி மாற்றும் மாண்பே போற்றி
மனுக்குலம் உய்ய வந்தோன் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–29

அறிவுப் பொருளாய் இருப்போன் போற்றி
அகத்துள் ஒளியாய் ஒளிர்வோன் போற்றி
செறிவுடன் என்னுள் சேர்ந்தோன் போற்றி
செகத்தோர் தொழநின்ற செம்மலே போற்றி
நெறிமுறைக் கொடுத்த நித்தியா போற்றி
நிலைத்த வாழ்வின் கருப்பொருள் போற்றி
குறியுடன் வாழ்வோர் குணமே போற்றி
குறையும் நிறையாய்க் கொள்வாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–30

கணமும் உன்னை மறவேன் போற்றி
கருத்துள் புதைந்த கதிரே போற்றி
மணமும் மலரும் நீயே போற்றி
மதித்தார் மனத்துள் வாழ்வாய் போற்றி
பிணமும் உந்தன் கொடையே போற்றி
பிறந்தார் அறிந்தால் அருள்வாய் போற்றி
உணர்வார் உணர்வாய் உறைந்தாய் போற்றி
உண்மை உள்ளொளி நீயே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–31

என்னில் உன்னைக் கண்டேன் போற்றி
ஏழல் எழுதா மறையே போற்றி
உன்னில் என்னைக் கொடுத்தேன் போற்றி
உள்ளொளி யாயென்றும் திகழ்பவ போற்றி
அன்பில் முதிர்ந்த அழகே போற்றி
ஆருயிர்க் கெல்லாம் இறையே போற்றி
என்றும் என்துணை யானாய் போற்றி
எண்ணும் எழுத்தும் நீயே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–32

மண்ணும் மலையும் மடுவும் போற்றி
மனதுள் உதித்த மந்திரம் போற்றி
கண்ணும் கருத்தும் கலையும் போற்றி
கவலைப் போக்கும் கருணைப் போற்றி
விண்ணும் விரிவும் விழவே போற்றி
விளையும் பயிரின் முளையே போற்றி
பெண்ணும் ஆணும் பெருமையே போற்றி
பெரிதும் சிறிதாய் பிறங்கியோய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–33

எண்ணிய தோற்றம் தருவோய் போற்றி
எதிலும் முதன்மை ஆனாய் போற்றி
வண்ணம் பலவாய் கலந்தோய் போற்றி
வாழ்வின் உச்சம் உன்னடி போற்றி
பண்ணில் ரசமாய் அமைந்தோய் போற்றி
பருகத் தாகந் தீர்ப்போய் போற்றி
கண்ணில் நின்ற கருமணி போற்றி
கண்ணுள் புகுந்தெனை ஆண்டவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–34

பார்வைத் தந்தெனைப் பாலிப்ப போற்றி
பாசத்தில் வீழாமுன் தடுத்தவ போற்றி
சோர்வை நீக்கிய சொடக்குநீ போற்றி
சோதிக்கா தென்னை ஆக்கியோன் போற்றி
கூர்மைக் குறையா வைத்தவ போற்றி
குஞ்சரம் ஏறிடுங் குருவே போற்றி
தீர்வைக் காட்டித் தெளித்தவ போற்றி
தீஞ்சுவைத் தாண்டிய தனிச்சுவைப் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்

ஞானவெளி மெய்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–35

பாடும் பழியெனைப் பணித்தவ போற்றி

பாலப் பருவத்தே பிடித்தவ போற்றி

ஆடும் வயதெனை ஆண்டவ போற்றி

ஆரும் அறியா தொடர்ந்தவ போற்றி

கூடும் பழியிணைக் கொடுத்தவ போற்றி

கூப்பிடு தூரத்து நின்றவ போற்றி

வாடும் நிலைதரா வாழ்த்தினாய் போற்றி

வாழ்வே எனக்கு நீயானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—36

உற்றப் பிறப்பிதன் உறுபொருள் போற்றி
உள்குவார் உள்ளத் துதிப்பவ போற்றி
கற்றக் கைப்பொருள் நீயே போற்றி
கனிவிக்க என்னுள் கரைந்தவ போற்றி
பெற்றத் தாயினும் பெரிதுநீ போற்றி
பேதமை நீக்கிடும் பெரும்பொருள் போற்றி
உற்றவர் யாரெனில் ஒருவன்நீ போற்றி
உலகெலாம் தொழநின்ற ஒன்மயா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–37

என்கண் காண்பது நினையே போற்றி
என்செவி கேட்பது நின்குரல் போற்றி
என்மூக் குணர்ந்திடும் நாற்றம்நீ போற்றி
என்வாய் மொழியது நின்னதே போற்றி
என்நா சுவைக்கு மூலம்நீ போற்றி
என்கை பலமாய் இருப்பவ போற்றி
என்கால் நடைக்கு ஆதாரம் போற்றி
என்பாத பயணம் உன்வழி போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–38

ஒன்றாய் நின்றுபின் விரிந்தாய் போற்றி
ஒருமையும் பன்மையும் நின்னதே போற்றி
அன்றாய் இன்றாய் அகன்றவ போற்றி
அருளும் மருளும் அறியார்க்குப் போற்றி
நின்றாய் கிடந்தாய் நின்நிலை போற்றி
நிலைகண் டுரைப்பா ருண்டோ போற்றி
என்றாய் நின்னடி வீழ்ந்தேன் போற்றி
எழுவாய் தந்தெனை அணைப்பாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–39

கண்டிட வியலா காட்சிநீ போற்றி
கருத்தைத் தாண்டிய கருப்பொருள் போற்றி
அண்டிய பேர்க்கு அமைதிநீ போற்றி
அண்டம் முழுமைக்கு அரசே போற்றி
மண்டிய இருளின் மகிமைப் போற்றி
மயக்கந் தவிர்த்தவர் உயர்வே போற்றி
உண்டிக் குணவாய் வாய்த்தவ போற்றி
உடையுறை யாயெனை உய்ப்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—40

பூதம் ஐந்தும் நீயே போற்றி

பூரண மாகிய புண்ணியா போற்றி

வாதம் பித்தம் வகைநீ போற்றி

வானுறைக் கோளும் ஆகினாய் போற்றி

வேதம் கொடுத்த வேந்தன் போற்றி

வேதத் துறைந்த பொருளே போற்றி

நாதப் பொருளின் நாயனே போற்றி

நானுனை நினைக்க வைத்தவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–41

அப்பன் ஆகிய அப்பே போற்றி
அம்மை ஆகிய செம்மைப் போற்றி
தெய்பம் ஆகிய வாழ்வே போற்றி
தென்படா தெங்கும் ஒளிர்பவ போற்றி
உப்பாய் உயிர்க்கு ளுறைந்தவ போற்றி
உவர்ப்பில் உவட்டா உணர்வே போற்றி
துப்பாய் வந்தெனைத் துவைப்பாய் போற்றி
துளியிலும் தங்கியத் தொன்மையா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—42

இருளாய் நின்று ஆள்பவ போற்றி
இல்லா தெங்கும் படர்ந்தாய் போற்றி
கருவுள் நின்று கலந்தாய் போற்றி
கடக்கக் கருதும் கணமே போற்றி
திருவாய் நின்று தெரிந்தாய் போற்றி
தெரிதலில்தெளிவாய் திகழ்ந்தாய் போற்றி
குருவாய் எனக்கே அமைந்தாய் போற்றி
குணத்தை மாற்றி அணைத்தாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–43

நன்றே நடக்கச் செய்வாய் போற்றி
நமனைப் பிடிக்கும் பொறியே போற்றி
ஒன்றே நினைக்க வைப்பாய் போற்றி
ஒன்றுள் நின்று ஆள்வாய் போற்றி
அன்றே என்னைப் பிடித்தாய் போற்றி
அருளைப் பொழிந்து அணைத்தாய் போற்றி
இன்றும் என்னைத் தொடர்பவ போற்றி
இனியிலைப் பிறப்பென சொன்னவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–44

தொட்டதும் தொடர்வதும் நீயே போற்றி
தொடுஞ்சுகங் காட்டிய தொன்மைய போற்றி
பட்டதும் படர்வதும் நீயே போற்றி
படும்நிலை மாற்றிடும் பரமனே போற்றி
சுட்டதும் குளிர்வதும் நின்நிலை போற்றி
சுகமெலாந் தந்தெனைக் கொண்டவ போற்றி
விட்டதும் விதைத்ததும் நின்பொருள் போற்றி
விலையிலா மாணிக்க மாமலை போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–45

உலகெலாம் ஓங்கிய ஒன்பொருள் போற்றி
உணர்ந்தவர்க் குதவும் உறுபொருள் போற்றி
தலமென தவத்தார் தன்பொருள் போற்றி
தத்துவங் கடந்த தனிநிலைப் போற்றி
இலமென இகழ்வார் இயல்பொருள் போற்றி
இருப்பதும் மறைந்ததும் இயற்கையே போற்றி
குலமெனக் கூடிய குருவருள் போற்றி
குணந்தனைக் கடந்தப் பெருமான் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–46

அஞ்சும் பொருளுக் கபயம் போற்றி
அஞ்சுங் கடந்த அருள்வெளி போற்றி
அஞ்சா திருக்கும் அகவொளிப் போற்றி
அறிவாய் விளைந்த ஞானமே போற்றி
நெஞ்சைக் குளிர்த்தும் நிம்மதி போற்றி
நெற்றிப் பொட்டின் மெய்நிலைப் போற்றி
விஞ்சும் விசைக்கு அதிபதி போற்றி
விரயந் தவிர்க்கும் விவரம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–47

கேட்கா தருளிய கோமான் போற்றி
கேள்விப் பொருளின் விடையே போற்றி
பூட்டியப் புரவியை ஓட்டுவாய் போற்றி
புரியார்க் கென்றும் புதிரே போற்றி
ஆட்டுவித் தழகுப் பார்ப்பவ போற்றி
ஆர்க்கு மறியா அனுபவம் போற்றி
கூட்டும் அடியார் சங்கம்நீ போற்றி
குற்றமே இல்லா மெய்ப்பொருள் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–48

அனலில் நின்ற ஆற்றலே போற்றி
அருந்தவத் தார்க்கு அமுதே போற்றி
புனலில் புகுந்த புனிதமே போற்றி
புண்ணியங் கொட்டும் அருவியே போற்றி
தினந்தினங் காணும் அதிசயம் போற்றி
திருப்தியில் உறைந்த நிறைவே போற்றி
இனங்கண் டவர்க்கு இறையே போற்றி
இன்றும் என்றும் இருப்பாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–49

கணக்கறி யார்க்குநீ கணக்காம் போற்றி
கண்டறி வார்க்குநீ கருத்தாம் போற்றி
பிணக்கறி யார்க்குநீ பிறையாம் போற்றி
பிழைபுரி வார்க்குநீ பிரிவாம் போற்றி
மணமறி வார்க்குநீ மலராம் போற்றி
மனந்தெளிந் தார்க்குநீ மறையாம் போற்றி
குணமறி யார்க்குநீ குறையாம் போற்றி
கும்பிட்டக் கைக்குத் துணையாம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–50

முத்தாய் விளைந்த முதலே போற்றி
முடிவிலா தத்துவப் பொருளே போற்றி
சத்தாய் என்பல மானாய் போற்றி
சன்மார்க்க மெய்பொருள் நீயே போற்றி
வித்தாய் எதற்கும் அமைந்தாய் போற்றி
விடிவும் முடிவும் நீயே போற்றி
சித்தாய் சிவனிலைக் கொடுப்பாய் போற்றி
சிற்றம் பலத்துறைக் குருவே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–51

ஆதியும் அந்தமும் ஆனவ போற்றி
ஆராதிப் பார்க்குள் அடைக்கலம் போற்றி
சோதியும் சொருபமும் ஆனவ போற்றி
சொர்க்கமும் நரகமும் கடந்தவ போற்றி
வேதியர் மெய்ப்பொருள் விளக்கமே போற்றி
வேதனைத் தீர்க்கும் வேந்தே போற்றி
சேதியும் சிறப்பும் நின்வசம் போற்றி
சேவித்தார்க் கெல்லாம் சொந்தம்நீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–52

அணுகுவார்க் கெல்லாம் ஆறுதல் போற்றி
அழமுடிக் காட்டா அருளொளிப் போற்றி
கணுவிலா கரும்பைக் காட்டினாய் போற்றி
கவிவரு மூற்றைக் கிளப்பினாய் போற்றி
இணக்கமா யிருந்தெனை நடத்தினாய் போற்றி
இழப்பிலா இன்பத் திருப்பவ போற்றி
வணக்கமும் வாழ்த்தும் நின்னதே போற்றி
வனப்புடன் வாழ வைப்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–53

குற்றம் போக்கும் குணமே போற்றி
குலந்தனைக் காக்கும் கூர்மதி போற்றி
அற்றம் ஆகி அண்ணிப்பான் போற்றி
அகமும் புறமும் நீயே போற்றி
கற்றவர் கருத்துள் காட்சியே போற்றி
கல்லார் தமக்கும் கைநிலை போற்றி
உற்றவர் பெற்றவர் நீயே போற்றி
உனைவிட் டுலகினில் துணையிலைப் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—54

பலம்தந் தென்னைக் காப்பவ போற்றி
பலமே அறிவென் றுணர்த்தினைப் போற்றி
வலம்வருங் கோளையுங் காப்பவ போற்றி
வரத்தால் கோளினை நிறுத்தினைப் போற்றி
நிலந்தந் துயிர்க்கு உதவினைப் போற்றி
நித்திய வஸ்துவாய் நின்றனைப் போற்றி
பலதும் சிலதும் நீயே போற்றி
பரந்த உனக்கிங் கீடார் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–55

ஈறிலாப் பொருளொன் றானாய் போற்றி
இணைதுணை யில்லா மூலமே போற்றி
நாடினார் நெஞ்சின் சுனையே போற்றி
நற்றமிழ் அருளிய வித்தகா போற்றி
பாடினார் பாட்டின் சுதியே போற்றி
பரம்பொரு ளாகிய ஈசனே போற்றி
ஊடினார் உளத்துளும் புகுந்தவ போற்றி
ஊரே பகைக்கினும் நீயுண்டு போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–56

உண்டெனச் சொல்வார் உட்பொருள் போற்றி
உள்ளது மில்லது மானவ போற்றி
கண்டுனைக் களித்தவர் யாரோ போற்றி
கனவுக் காட்சியாய் வாழ்பவ போற்றி
வண்டும் மலரையு வமைத்தவ போற்றி
வாசத் துறைந்து நிறைந்தவ போற்றி
விண்டும் விளக்க முடியுமோ போற்றி
விசைக்குள் விசையாய் இருப்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–57

விசையாய் எதற்கும் இருப்பவ போற்றி
வித்தைக் கதிபதி யானவ போற்றி
இசையுள் இசைந்து இருப்பவ போற்றி
இசைத்தார்க் கிணைந்து அருள்பவ போற்றி
அசையும் பொருளின் அணுவே போற்றி
அணுவுக் கணுவாய் ஆள்பவ போற்றி
திசையிலா திடத்து தூவொளி போற்றி
தீண்ட வியலா தெய்வமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—58

தெய்வமென் றழைத்தால் தெரிபவ போற்றி
தேடியெங் கலைந்தும் தென்படாய் போற்றி
மெய்தவத் தோரின் மெய்பொருள் போற்றி
மேவித் தொழுவார்க் கடைக்கலம் போற்றி
பொய்நிலை விட்டு அகன்றவ போற்றி
புண்ணியம் செய்தோர் புரிதல் போற்றி
செய்யா வினையின் பலனே போற்றி
செய்தவர் வினைக்கு விடிவே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–59

விழிவைக் கொடுக்கும் விழியலே போற்றி
விரைந்துனைத் தொடர்பவர் உறவே போற்றி
அழியும் முழியும் காட்டாய் போற்றி
அனுபவத் துள்ளே எழுவாய் போற்றி
முழியும் பொருளின் முதலே போற்றி
முனிதவ கோலத் தடங்காய் போற்றி
இழியுன் இசையாய்த் தொடுப்பாய் போற்றி
இறப்பிலா நிலைக்குள் வைப்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–60

இறவா பொருளே இறையே போற்றி
இரவா முன்னே அருள்வாய் போற்றி
துறவா தவற்கும் துணையே போற்றி
துறந்தவர் தேடும் பதமே போற்றி
மறவா திருக்க அருள்வாய் போற்றி
மறையாய் உலகோர்க் கமைந்தாய் போற்றி
உறவாய் எவர்க்கும் உள்ளோன் போற்றி
உணர்வார் நெஞ்சில் உண்மையே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–61

உண்மையின் உயர்ந்த பொருள்நீ போற்றி
உலகம் உவக்க நின்றவ போற்றி
வெண்மையின் உயர்ந்த நிறமே போற்றி
வெறுமையில் குடிபுகுந் தாள்பவ போற்றி
அண்மைச் சுட்டெனக் காகினாய் போற்றி
அண்மையோ சேய்மையோ பிறர்க்குநீ போற்றி
அண்ணலென் றழைப்பவர்க் கடைக்கலம் போற்றி
அண்ணாந்து பார்ப்பார்க்கு ஆகாயம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—62

ஆகாய வெளிகடந் தாள்பவ போற்றி
ஆனந்த மாகிய பரநிலை போற்றி
வேகா தலையின் வேந்தே போற்றி
வேற்றுமை உருபாய் தோன்றுவோய் போற்றி
போகா புனலின் புனிதமே போற்றி
போற்றுவார் போற்றலுக் கேற்றவ போற்றி
சாகா கலையைச் சாற்றியோன் போற்றி
சகாய மளிக்கும் சரமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–63

சராசர மாகிய சக்தியே போற்றி
சகத்திற் கொருகுரு நீயே போற்றி
பராபர மாகியப் பழம்பொருள் போற்றி
பகுத்துணர் வார்க்குள் சூட்சமம் போற்றி
நிராபர மாகின நித்தியா போற்றி
நிர்மல ரூபனே நிரந்தரா போற்றி
சிராபரங் கடந்த சின்மய போற்றி
சிற்சபை பொற்சபைக் கொண்டவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–64

கொண்டா ருன்னைக் கடந்தார் போற்றி
கொடுமுடி தாண்டியக் கோசமே போற்றி
கண்டார் பணிக்குங் காட்சியே போற்றி
கடல்வெளி பரப்பெலாந் தவழ்பவ போற்றி
தண்டனிட் டார்க்குத் தவபலன் போற்றி
தரும அதர்ம மற்றவ போற்றி
அண்ட வித்தையை ஆக்கியோன் போற்றி
அந்த காரத்துள் மிளிர்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–65

மிளிர்பவைக் குள்ளும் மிளிர்பவ போற்றி
மிரட்சியில் வீழ்வார்க் கபயம்நீ போற்றி
தளிர்ப்பவைக் கெல்லாம் தயவே போற்றி
தன்னிலை யறிந்தவர் தலைவநீ போற்றி
வளிபெருங் காற்றின் வாரியம் போற்றி
வழியறியார்க் கென்றும் விழிநீ போற்றி
விளித்திடு முன்னே விரைபவ போற்றி
விதியை மாற்றும் வித்தகன் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–66

விதிக்கு முந்திய விதிநீ போற்றி
விரைமலர் போன்று இணைந்தவ போற்றி
சதிக்கும் கெடுநிலைச் சாரா போற்றி
சகலமும் அறிந்த சகாயனே போற்றி
அதிதமா யெதற்கு மானவ போற்றி
அந்தரந் தாண்டிய அதிசயம் போற்றி
அதிபதி யாகிய ஆண்டவ போற்றி
அற்பமும் விகற்பமும் அகன்றவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–67

அகலமும் நீளமும் அமைத்தவ போற்றி

ஆயிரங் கோடி படைத்தவ போற்றி

புகலிடம் தந்தெனைக் காப்பவ போற்றி

புதுமைக்கும் பழமைக்கும் புரியாதான் போற்றி

அகலென அகத்துள் ஒளிர்பவ போற்றி

ஆரும் அறியொணா இருள்நீ போற்றி

பகலிர வொன்று மில்லான் போற்றி

பகர்ந்து முடியா பதநிலைப் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–68

பகர்வார்க்கும் புரியாத புதிரேநீ போற்றி
பணந்தேடி அலைவார்க்கு வாய்க்காதான் போற்றி
அகல்வார்க்கு மகமிருந் தருள்வோய்நீ போற்றி
அதிசயங் காட்டியே அசத்துவோய் போற்றி
இகல்பவர் இதயத்து மிருப்பவ போற்றி
இம்மிக்குள் இம்மியாய் இழைந்தவ போற்றி
நகலென படைப்பினைக் காட்டுவோய் போற்றி
நல்லதுங் கெட்டதை நகர்ந்தவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–69

நகமுஞ் சதையுமாய் ஆனவ போற்றி
நடுநின் றெதற்கும் தனித்தவ போற்றி
அகமும் புறமும் அறிந்தவ போற்றி
அகவழித் தொடர்வார்க் கருள்வாய் போற்றி
இகமும் பரமும் உன்னதே போற்றி
இடம்பொரு ளறிவா ரிடம்நீ போற்றி
முகமறி யாத பழக்கமே போற்றி
முகர்ப்பவர்க் குள்புகும் வாசமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–70

வாசங் காட்டும் வானமே போற்றி
வளர்மதி போலென் வன்பே போற்றி
பாசங் காட்டும் பரமா போற்றி
பரிந்தெனை யாளும் பெம்மான் போற்றி
நாசம் போக்கும் நன்மையே போற்றி
நரனை மாற்றும் தேவனே போற்றி
ஈசா வென்றுனை யழைத்தேன் போற்றி
இரக்கஞ் செய்யும் இறையே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–71

பசிப்பிணி நீங்கிட அருள்வாய் போற்றி
பயமிலா வாழச் செய்வாய் போற்றி
வசித்திட நல்லில் வழங்குவாய் போற்றி
வாழ்த்திட மனதை வளர்த்திடு போற்றி
நசித்திடா துயிர்க்கு நலமிடு போற்றி
நல்லோர் பெருகிட வரமிடு போற்றி
ருசித்துனை யணுக சுவையிடுப் போற்றி
ருத்ரம் இல்லா உருக்கமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–72

உருகுவா ருளத்தை உய்ப்பவ போற்றி

உன்திரு சந்நிதித் திறந்திடு போற்றி

கருவினில் என்னைக் கலந்தவ போற்றி

கருத்தெலாம் நிறைந்து ஆள்பவ போற்றி

கருவிழித் தொட்டக் காட்சியே போற்றி

கலக்கம் போக்கும் கருணையே போற்றி

இருவிழித் தாண்டிய இணக்கமே போற்றி

இருளில் ஒளிரும் அருளே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–73

அருளைப் பொழியும் ஊற்றே போற்றி
அகத்துள் காயும் நிலவே போற்றி
பொருளாய் உயிர்க்குப் பலமே போற்றி
பொங்கும் நுரையிலா கடலே போற்றி
மருளை மாற்றும் மாண்பே போற்றி
மனத்துறைப் பதிவை நீக்குவாய் போற்றி
இருளுள் ஒளியாய்த் தெரிபவ போற்றி
இருப்பிடங் காட்டா எழிலே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–74

இருப்பிடம் ஒன்றென இல்லாய் போற்றி
எல்லா விடமும் நின்னதே போற்றி
நிருபணங் காட்டா நிமலனே போற்றி
நிறுவும் அறிவிங் கார்க்கோ போற்றி
பெருவெளித் தேடியும் கிட்டாய் போற்றி
பேசிப் பிடிப்பார்க் கெட்டாய் போற்றி
அருவத் தருவாய் ஆகினாய் போற்றி
அருள்வெளித் தாண்டிய ஞானமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–75

ஞானம் கொடுக்கும் ஞானியே போற்றி
ஞானந் தாண்டியச் சித்தே போற்றி
ஆனமுதற் பொருள் ரூபனே போற்றி
ஆர்க்கு மடங்கா ஆபரம் போற்றி
மோன முதல்தவம் நீயே போற்றி
மோகங் கடந்த அமோகம் போற்றி
வான வழித்தடம் வரைந்தாய் போற்றி
வாழ்வா தாரமே நீயே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–76

வாழ்வைக் கொடுத்த வள்ளலே போற்றி
வாழும் உயிர்க்கெலாம் மீட்சியே போற்றி
தாழ்வும் வாழ்வும் தாண்டியோன் போற்றி
தரமுளோர் தமக்கே தருபவ போற்றி
ஆழ்நிலை உயர்நிலை அற்றவ போற்றி
ஆனந்த பீடத்தின் அரசே போற்றி
சூழ்நிலை யற்ற தத்துவ போற்றி
சூதுவா தில்லா சுதந்திரா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–77

சுதந்திர முயிருக் களித்தவ போற்றி
சொப்பனங் கடந்த சொந்தமே போற்றி
சிதம்பர தேசத்துச் செல்வமே போற்றி
சித்தர் குலத்திற் கதிபதி போற்றி
அதம்பலச் செய்வார்க் ககப்படாய் போற்றி
அனுக்கமா யிருந்து மறிகிலார் போற்றி
விதவித மாயெங்கும் விரிந்தோய் போற்றி
விந்தும் நாதமாய் விளங்குவோன் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–78

விந்தில் நின்ற தூவொளி போற்றி
விளக்கம் கொடுக்கும் மாமறைப் போற்றி
அந்தம் இல்லா அரும்பொருள் போற்றி
அறிவறி வார்க்கு அறிவாம் போற்றி
சிந்திப் பார்க்கு சிவமயம் போற்றி
சிரசா யெதற்கு மமைந்தாய் போற்றி
நந்தியின் நாயனே நின்னடிப் போற்றி
நமசி வாயமே நலமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–79

நலந்தர வல்ல நற்பொருள் போற்றி
நல்லடி யார்க்கு மெய்ப்பொருள் போற்றி
கலகம் மாற்றும் கருப்பொருள் போற்றி
கணிதந் தாண்டிய கணிப்பே போற்றி
புலனறிக் கெட்டா போதமே போற்றி
புத்திக்குஞ் சித்திக்கும் புதிரானோன் போற்றி
துலங்கிடு துரியத் துறையான் போற்றி
துரியா தீதம் புணரான் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–80

புணரக் கிடக்கா புனிதா போற்றி
புல்முத லாயுள வறிவே போற்றி
உணர்வார் உளத்து உணர்வே போற்றி
உரையால் விளக்க மயங்கான் போற்றி
கணங்களைத் தாண்டிய காருண்யா போற்றி
கதிரொளி மிக்கக் கனலே போற்றி
குணங்கெடா தவர்க்கு குறிநீ போற்றி
குறிப்பில் உணர்த்துங் குருவே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்

ஞானவெளி மெய்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—81

குறிப்பறி வார்க்கு ஜெயமே போற்றி

குற்றத் தொதுங்கா களிப்பே போற்றி

முறிவிலா தொடரும் உறவே போற்றி

முற்றுந் தொடர்ந்தார்க் கற்றமே போற்றி

பறிக்க வியலா பழமே போற்றி

பகுத்தறி வார்க்குப் பதமே போற்றி

உறிக்க வொண்ணா உயரமே போற்றி

உத்தம மாகிய விமோசனம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–82

உத்தமக் குணத்தார்க் குறவே போற்றி
உடலுயிர் தாண்டிய அறமே போற்றி
சித்தர்கள் மயங்கிய சிவமே போற்றி
சித்தா காசத் தோன்றுவோய் போற்றி
பத்தர்கள் பணியும் பாதமே போற்றி
படிநிலை ஏறிட உதவுவாய் போற்றி
அத்தனே அடியருக் கமுதமே போற்றி
அறவழி அடைபவர்க் கடைக்கலம் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–83

அடைந்திட வேண்டிய அரும்பொருள் போற்றி
அல்லலை அகற்றும் மருந்தே போற்றி
மடைதிறந் தோடும் புனலே போற்றி
மாசிலா மனத்துறை மணியே போற்றி
கடைநிலை யோர்க்கும் கனிவே போற்றி
காலக் கருத்தை வென்றவ போற்றி
படைநிலை தவிர்த்த பாங்கே போற்றி
பகையிலா தெவர்க்கு மருள்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–84

பகையுளத் தோங்கா பரமே போற்றி
பண்டருந் தின்றும் பாலிப்பாய் போற்றி
நகைமுகத் தோங்கும் நளினமே போற்றி
நற்றவத் தார்க்கு நாயனே போற்றி
தொகையடி யார்க்கும் தனித்தவ போற்றி
தொல்நிலை கடந்த தொன்மையே போற்றி
வகைதெரிந் தணுகநல் வாய்ப்பே போற்றி
வான்வழி காட்டி வாழ்விப்பான் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—85

வானறி வோங்கிட வைப்பவ போற்றி
வையகத் தார்க்கு மெய்ப்பொருள் போற்றி
தானறி வாகியே வாழ்பவ போற்றி
தன்னிலை இழந்த தவநிலை போற்றி
ஈனரும் தேறிட துறையே போற்றி
ஈசனாய் எவர்க்கும் உள்ளவ போற்றி
ஊன மில்லா உண்மையே போற்றி
உலகந் தொழநின்ற தொன்மையா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–86

தொன்மைக்குந் தொன்மையாய் நின்றவ போற்றி
தோன்றுபல் பொருளுக்குந் தோற்றுவாய் போற்றி
இன்மைக்கும் உளதிற்கும் ஏற்றவ போற்றி
இயல்பான அனைத்துமுன் இயற்கையே போற்றி
வன்மைக்கும் வலிதந்து மாற்றுவாய் போற்றி
வசப்படா துலவிடும் வானமே போற்றி
நன்மைக்கு நயிந்திரங்கு நாதமே போற்றி
நமன்வாசல் அடைத்திட வல்லவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–87

வல்லவ னொருவனு நீயே போற்றி
வையம் பலகொண்டு வாழ்பவ போற்றி
கல்லா பிள்ளைக்கும் கலையானாய் போற்றி
கதிமோட்சந் தரவல்ல கலைநாதம் போற்றி
புல்லா யிருப்பினும் புனர்விப்பாய் போற்றி
புழுமுதலும் புனிதமுற ஏற்றுவிப்பாய் போற்றி
இல்லா னெளியனுக்கும் இறைநீயே போற்றி
இசையோடு லயமான சுதிநீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—88

சுதியோட்ட மாயுடம்பை சுதந்தரிப்பாய் போற்றி
சுத்தத்தின் அடிநாதம் ஆனவனே போற்றி
பதிபசு பாசமெனும் சித்தாந்தம் போற்றி
பாருலகை சீருலகாய் பக்குவிப்பாய் போற்றி
உதித்தெழுங் கதிருள்ளே உழன்றிடுவாய் போற்றி
உயிராக வெளிநின்று இயக்குவிப்பாய் போற்றி
விதிவேறு நீவேறாய் நிற்பவனே போற்றி
விளையாடும் பிள்ளைநீ அல்லவே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–89

விளைபோகங் கர்மாவின் பால்வைத்தாய் போற்றி
வினைமுடிக்க குருவாக வழிவெடுப்பாய் போற்றி
தளைகட்டா தவயோகங் காட்டுவித்தாய் போற்றி
தத்துவப் பொருளாக தவழ்கின்றாய் போற்றி
முளைக்கின்ற பயிருக்கும் முனைப்பானாய் போற்றி
முழவென்ற வட்டத்துள் மையம்நீ போற்றி
கிளையேது மில்லாத நீள்மரம்நீ போற்றி
கிளிகொஞ்சும் மொழியுள்ளே சுகமானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு—90

சுகதுக்கஞ் சாராத சூழல்நீ போற்றி

சூனியத்துள் குடியிருந்து ஆள்பவனே போற்றி

அகசுத்த முள்ளார்க்கே அகப்படுவாய் போற்றி

அண்டபிண்ட மெங்கனுமுன் ஆளுமையே போற்றி

இகபரத்துள் இருக்கின்ற இருள்ஜோதி போற்றி

இமைபொழுது மௌனைநீங்கா என்னுயிரே போற்றி

யுகயுகமாய் தேடுவோரின் தெய்வம்நீ போற்றி

யுத்தமற்ற பூமிக்கு அதிபதிநீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்

ஞானவெளி மெய்ப்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–91

போராடுங் குணங்கெட்டால் பிடிபடுவாய் போற்றி

போற்றிபணிந் திருப்பவரின் புத்தியில்நீ போற்றி

யாரோடும் மயங்காதப் புத்தறிவே போற்றி

யகரமுனை சூட்சமத்தில் பிடிபடுவாய் போற்றி

வேரோடு நுனிமுதலா விருட்சகம்நீ போற்றி

வெண்பஞ்சு மேகத்தின் வெள்ளொளியே போற்றி

நீரோடு நின்றாடும் மின்சாரம் போற்றி

நீரில்லா துயிர்க்கென்றும் உய்வில்லைப் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–92

உய்யநின்ற உயிர்க்குறுதிப் பொருளே போற்றி

உயிரோ டொட்டிய ஆன்மா போற்றி

பெய்யநின்ற மழைக்குள் மறைந்தோன் போற்றி

பூதமைந்தின் பேதங்கடந் தாள்வோன் போற்றி

செய்யநின்ற வினைப்பயன் கரைப்போன் போற்றி

சேரவழி காட்டி சேர்ப்பிப்போன் போற்றி

தெய்வநிலை கூட்டுவிக்கும் தேவநீ போற்றி

தெரிந்தார்க்கு தெரியார்க்கும் தெளிவேநீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–93

தெளிவில்லா நெஞ்சிற்கு விழவளிப்போய் போற்றி

தேவாதி தேவரெல்லாந் தொழநின்றோய் போற்றி

வெளிகடந்த மெய்ப்பொருளாய் ஆகிநின்றாய் போற்றி

வெண்மைக்குள் பந்நிறத்தைப் பதுக்கிவைத்தாய் போற்றி

வளிவாத பிணிபோக்க வல்லோனே போற்றி

வாய்த்தார்க்குப் பிறப்பறுக்கும் மருந்தேநீ போற்றி

இளிவர லொற்றா இயல்பே போற்றி

இனிமைக் கூற்றாய் இருப்பவ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–94

கூற்றம் ஒழிக்கும் கூத்தே போற்றி
கூடு மழயார் குணமே போற்றி
சீற்றம் தவிர்த்த சிவனே போற்றி
சிற்றறிக் கெட்டா சொற்பதம் போற்றி
ஆற்றுப் படுத்தும் ஆறுதல் போற்றி
ஆருயிர்க் கெல்லாம் பேருயிர் போற்றி
நாற்றங் காட்டும் நறுமலர் போற்றி
நாசி யறியா வாசியே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு –95

வாசித் தெரிந்தார் வாழ்வே போற்றி
வாழ்வின் பயனும் நீயே போற்றி
ஆசிக் கொடுத்து ஆள்வான் போற்றி
ஆதார மாகி நிற்போன் போற்றி
யாசிப் பார்க்கு புண்ணியம் போற்றி
யாது மாகிய செம்பொருள் போற்றி
நேசிப் பார்க்கு நெகிழ்ச்சிநீ போற்றி
நேற்றும் இன்றும் என்றும்நீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–96

என்றும் எனக்குற்ற இறைவா போற்றி
எல்லா உயிர்க்கும் இறைநீ போற்றி
மன்றில் ஆடும் மாமணிப் போற்றி
மறைந்து நின்ற மறையே போற்றி
அன்பில் உருகும் அருமையே போற்றி
அனைத்து உயிர்க்கும் விழயலே போற்றி
இன்புந் துன்புந் இல்லாய் போற்றி
இயல்பாய் இருக்கும் இயக்கமே போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்

ஞானவெளி மெய்ப்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–97

இயக்கம் அறவைத்து இறப்பளிப்பாய் போற்றி

இறந்தார்க்கு மீண்டும் பிறப்பளிப்பாய் போற்றி

மயக்கம் அறுத்தார்க்கு மதிகொடுப்பாய் போற்றி

மண்விட்டு விண்ணேற தடமளிப்பாய் போற்றி

தயக்கம் தனைநீக்கி தயவளிப்பாய் போற்றி

தடுமாற்றம் அற்றிருக்க திறமளிப்பாய் போற்றி

சுயத்தை உணரவைத்து சுகமளிப்பாய் போற்றி

சூத்திரந் தெரியார்க்கு சொப்பனம்நீ போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–98

சொப்பன வாழ்விலும் சுகமாவாய் போற்றி
சோதனை யில்லா சமரசம் போற்றி
தப்பிலா திருக்கத் துணையாவாய் போற்றி
தண்டந் தவிர்க்க உதவுவாய் போற்றி
எப்பவும் என்மதி நீயே போற்றி
எழுபிறப் பில்என் நிம்மதி போற்றி
அப்பனுக் கப்பனாய் ஆனவ போற்றி
அடிகாட்டி விதிமாற்றும் அருளாளா போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–99

அருளாகி உயிருக்குள் அணுகினவ போற்றி

அறமாகி விதியறுக்கும் அருமருந்தே போற்றி

பொருளாகி புரியார்க்கு புரியவைப்பாய் போற்றி

பொதுநடனாய் நீநடித்துத் தெளிவிப்பாய் போற்றி

இருளாகி இருநிதிக்கும் முதலானாய் போற்றி

இமைக்காது காணவல்ல எழிலேநீ போற்றி

மருளோட்டும் மருத்துவமுன் நினைவொன்றே போற்றி

மதிகடந்த நிலையயேகி மாண்புற்றாய் போற்றி

திருச்சிற்றம்பலம்



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# போற்றி நூறு–100

மதித்துன்னைச் சரணானார் மனசாட்சி போற்றி

மலைகடலும் வான்விரிவும் உன்சித்துப் போற்றி

விதிவெல்ல வினையடக்கஞ் செய்விப்பாய் போற்றி

விரைந்துலகை விடுவிக்க வந்திடுவாய் போற்றி

சதிப்பாரை அம்பலப் படுத்துவோன் போற்றி

சன்மார்க்கம் செகமோங்கச் செய்விப்பான் போற்றி

துதியொன்றே துணைசெய்ய சொல்கொடுப்பாய் போற்றி

தூவொளியாய் நிறைந்தெங்கும் நீயாள்வாய் போற்றி

திருச்சிற்றம்பலம்